தோரண பந்தலிலே
பாண்டியன் தோகைக்கயல் விழியாள் கல்யாண வைபவமாம்

பூரணமாகவே பல்வகை மணியாரம்
புது மலர் மாலையுடன் புன்சிரிப்புடன் நின்றாள்

மறை ஓதிட நான் முகனும் அமர்ந்திட
பிறை அணி இறைவனும் சிரப்புடன் வந்திட
தன் திருக்கையாலே திருமகள் தொழுமாலே
தங்கையின் மலர்கரத்தை சுந்தரனிடம் வைத்தான்

சந்தன  கும்குமம் சேடிகள் தந்திட
வந்த விருந்தினர் சிந்தை களித்திட
விந்தை விந்தையென வேத பூதகணம்
விரும்பி அரும் சுவை உணவு உண்டிட

கண்டிலாதபல சீர்வகை வந்திட
எண்ணிலாத பல ரத்னம் தவிந்திட
அண்டம் புகழ்ந்திட எங்கும் காணாத
மாபெரும் திரு நாள் மதுரை மா நகரில்